**சிலாபம் நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிலாபம் நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிலாபம் நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் இவ்வறிக்கையின் 1.6 ஆம் பந்தியின் அவதானிப்புக்களைத் தவிர்த்து முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆதனம் பொறி உபகரண விடயங்களுக்குரிய கணக்குகளின் பிரகாரம் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பெறுமதியானது இரண்டு கணக்கு விடயங்கள் தொடர்பாக ரூபா 9,927,421 அதிகரித்தும் மற்றும் ஏனைய இரண்டு கணக்கு விடயங்கள் தொடர்பாக ரூபா 11,550,477 குறைத்தும் காட்டப்பபடிருந்தது. | இந்த மீதிகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கின்றேன் | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) களஞ்சிய இருப்பு ரூபா 438,431 ஆல் குறைத்து கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கின்றேன் | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) 2017 ஆம் ஆண்டிற்கான முத்திரைக் கட்டண கூடுதல் ஒதுக்கீடான ரூபா 897,380 தொகையை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்படும் எனத் தெரிவிக்கின்றேன் | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) நிலுவையான வீத வரியை அறவீடு செய்யும் போது அறவிடப்பட்ட ரூபா 514,677 தண்டப் பணமானது வீத வரி பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தண்டப் பணத்தை அறவிட்டு தனியாக கணக்கீடு செய்யப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | தண்டப் பணத்திற்காக வருமானத் தலைப்பினை உருவாக்கி அவை கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (உ) மீளாய்வாண்டிற்காக அறவீடு செய்ய வேண்டியிருந்த ரூபா 399,300 தொகையான காட்சிப் பலகைக் கட்டண வருமானம் முழுமையாக கணக்குகளில் தவிர்க்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | காட்சிப்படுத்தல் பலகைக் கட்டணத்தை முறையாக அறவீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கினக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 11 கணக்கு விடயங்கள் தொடர்பான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 72,556,071 பெறுமதியானது பட்டோலைகள் மற்றும் அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 52,306,010 ஆக இருந்ததனால் ரூபா 20,250,061 வித்தியாசமாகும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆவணங்களை சரி செய்து சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நீண்ட கால வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 27 கடைகளுக்காக மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட பெறுமதியில் ரூபா 4,473,215 தொகையானது உள்ளூராட்சி ஆணையாளரின் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரமின்றி 2021 மே 20 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தின் மூலம் பதிவழிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் புதிய கடை வாடகையை திருத்தும் நடவடிக்கை மேற்கொண்டதன் பின்னர் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். என தெரிவிக்க விரும்புகின்றேன். | உள்ளூராட்சி ஆணையாளரின் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துடன் பதிவழித்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டிற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 15 ஆதனங்கள் தொடர்பாக பட்டியலிடப்பட்ட பெறுமதிகள் ரூபா 3,427,199 பெறுமதியானது உள்ளூராட்சி ஆணையாளரின் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரமின்றி 2021 சனவரி 28 ஆந் திகதிய 19 ஆம் இலக்க நிதிக் குழு தீர்மானத்தின் மூலம் பதிவழிக்கப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என குறிப்பிடுகின்றேன். | உள்ளூராட்சி ஆணையாளரின் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துடன் பதிவழிக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்காக எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 305,906,922 கூட்டு மொத்தமான 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் விபரமான பட்டோலையுடன் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | இறுதிக் கணக்குகளுடன் உரிய பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 32,013,571 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 20,953,270 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் வீத வரியினை அறவிட வேண்டிய ஆதனங்களிலிருந்து ரூபா 46,907,708 வீத வரிப் பணம் அறவிட வேண்டிக் காணப்பட்டதுடன் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நிலுவையான வீதவரிகளை அறவீடு செய்வது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீண்டும் மதிப்பீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கின்றேன். | நிலுவையான வீத வரியை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான கடை வாடகை வருமானம் ரூபா 34,867,858 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சபைக்குச் சொந்தமான 37 கடைகளை 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் உடன்படிக்கை செய்து | மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் புதிய கடை வாடகையை திருத்தம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அறவீடு செய்வதற்கும் புதிய வாடகை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். | நிலுவையான கடை வாடகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 285 கடைகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட குத்தகை வாடகை திருத்தம் செய்யப்பட்டிருக்காததுடன் அதன் காரணமாக நகர சபையினால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த அதிகளவான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | |

**(இ) முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் பெற வேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 51,819,070 ஆக இருந்ததுடன் அப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 52,716,450 பணம் பெற வேண்டியதாக உள்ளது. | நாளது வரையாக முத்திரைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகரசபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் என்பன தொடர்பான விடயங்களை முறைப்படுத்தலும் நிருவகித்தலும், பொதுமக்களின் நல் வாழ்க்கை, வசதிகள் நலன்புரிகள் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **பெற வேண்டிய கணக்கு** | | |
| (அ) 2010 ஆம் ஆண்டிலிருந்து முன் கொண்டு வரப்பட்டுக் காணப்பட்ட ரூபா 8,871,877 ஆன முற்கொடுப்பனவு மீதிகளின் பெறுமதியையும் ரூபா 73,940 ஆன சபையினால் செய்யப்பட்ட வைப்புக்களின் பெறுமதியையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்ட மீதியை விரைவாக இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். செலுத்த வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 29,467,040 ஆக இருந்ததுடன் உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்பு பணமாகச் செலுத்த வேண்டியிருந்த ரூபா 9,021,520 பணத்தையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்பு பணத்தை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி சேர் வரிக் கணக்கிலுள்ள ரூபா 2,882,489 வரவு மீதி சம்பந்தமாக தேவையான தீர்த்து வைத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அனைத்து தகவல்களும் நீர்கொழும்பு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெற்று தேவையான தீர்த்து வைத்தல்களைச் செய்தல் வேண்டும். |